# அதிகாரிகளுக்கு நிர்வாக மேலாண்மை பயிற்சி முகாம்

காரைக்கால், நவ.29-

காரைக்காலில் நடைபெறும் நிர்வாக மேலாண்மை குறித்த பயிற்சியால் பொது மக்களுக்கு திட்டங்களை எளிதாக எடுத்து செல்ல வழி வகை செய்யும் என்று கலெக்டர் அசோக்குமார் பேசினார்.

காரைக்கால் அரசு துறை அதிகாரிகளுக்கு திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறை சார்பில் நிர்வாக மேலாண்மை குறித்த 3 நாள் பயிற்சி முகாம் நேற்று காமராஜர் நிர்வாக வளாகத்தில் தொடங்கியது. முகாமை கலெக்டர் அசோக்குமார் தொடங்கி வைத்து பேசியது: இந்த பயிற்சி அரசு துறையில் உள்ள தலைமை அதிகாரிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். பயிற்சியை சிறப்பாக எடுத்தால் அந்த துறையை சிறப்பான முன்னேற்றம் அடைய செய்ய முடியும். மேலும் பொதுமக்களுக்கு அரசின் திட்டங்களை எளிதாக கொண்டு செல்லவும் வழிவகுக்கும். எனவே காரைக்கால் அரசு துறை அதிகாரிகள் பயிற்சியை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். இயக்குனர் விஜயலட்சுமி வாழ்த்தி பேசினார்.

நிர்வாக மேலாண்மை பயிற்சியை, சென்னை அண்ணா இன்ஸ்ட்டியூட் ஆப் மேனேஜ்மெண்ட் டாக்டர் வெங்கடேசன், தாமோதரன், பொதுப்பணித்துறை துணை கண்காணிப்பாளர் மனோராஜ் அளித்து வருகின்றனர். காரைக்கால் திட்டத்துறை துணை இயக்குனர் சாந்தா வில்லியம்ஸ் வரவேற்றார். பயிற்சியில் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அரசு துறை தலைமை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




காரைக்கால் அரசு தலைமை அதிகாரிகளுக்கான நிர்வாக மேலாண்மை குறித்த பயிற்சி முகாமை கலெக்டர் அசோக்குமார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.